# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13,371—1962 නොවැම්බර් 2 වැනි සිකුරාදා—1962.11.2

13,371 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 2 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேருகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானுவித அறிவித்தல்கள் .. | 573 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 573 | "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

### திரைப்பட ஆணைக்குழு

இக்குழுவுக்கு அனுப்பும் விடயங்கள் ஏற்றுக்கொள்ளும் திகதி 1962 ம் ஆண்டு நொவம்பர் மாதம் 15 ம் தேதி வரைக்கும் நீடிக்கப்பட்டிருக்கின்றது என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. எழுத்து மூலம் விண்ணப்பிக்காது ஆணைக்குழுவின் முன் நேரிற் சாட்சியமளிக்க விரும்புவோர், அவ்விருப்பத்தை ஆணைக்குழுவுக்குத் தெரியப்படுத்திஞல், அவர்களுக்கு அவ்வண்ணம் நேரிற் சாட்சியமளிக்கச் சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

3. இரகசிய விசாரணைகள் நடத்த விரும்பின் அவ்விதமும் நடத்தப்படலாம்.

டபிள்யூ. ஆர். பி. ராஜகருணு,
காரியதரிசி,
திரைப்பட ஆணைக்குழு.

1962 ம் ஷூ அக்டோபர் மீ 30 ந உ
கைத்தொழில் உள்ளூர் கலாச்சார அமைச்சு,
டொறிங்டன் சதுக்கம்,
கொழும்பு 7.

11—279.

## அரசாங்கப் பகுதிகளின் நானுவித அறிவித்தல்கள்

### துவக்கு முதலியவற்றின் 1963 ம் ஆண்டுக்குரிய அனுமதிச் சீட்டுப் புதுப்பித்தல்—மாத்தளை மாவட்டம்

இத்தால் சகலருக்கும் அறிவிப்பது யாதெனில், மாத்தளை மாவட்டத்தில் உள்ள பிரிவுகளின் காரியாதிகாரிகள் தங்கள் தங்கள் பிரிவுகளில் பாவிக்கப்படும் கைத்துப்பாக்கி, சுழற் துப்பாக்கி தவிர்ந்த ஏனைய அனுமதிச் சீட்டுகளை 1962 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ம் திகதியிலிருந்து புதுப்பிப்பார்கள். கைத்துப்பாக்கி, சுழற் துப்பாக்கி ஆகியவற்றின் அனுமதிச் சீட்டுக்கள் அதே திகதி தொடக்கம் மாத்தளைக் கச்சேரியில் புதுப்பிக்கப்படும்.

2. 1962 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் திகதிக்கு முன்னர் அனுமதிச் சீட்டுக்களைப் புதிப்பித்தல் நலம். துவக்கு முதலியனவைகளைக் காரியாதிகாரிகள் முன்னும், கைத்துப்பாக்கி முதலியவற்றை என் முன்னிலையிலும் பரிசோதனைக்காகக் கொண்டு வருவதுடன் 1962 ம் ஆண்டுச் சீட்டுக்களையும் அவ்விடத்தில் ஒப்படைக்க வேண்டும்.

3. 1962 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் திகதிக்குப் பின்னர் வரும் புதுப்பிப்பதற்கான விண்ணப்பங்கள் இரண்டு மடங்கு கட்டணங்களுடனேயே ஏற்றுக் கொள்ளப்படும். 1963 ம் ஆண்டிற்கு அனுமதிச் சீட்டுகளை புதுப்பிக்க விரும்பாத வரும் கெட்டுப்போன துவக்கு முதலியவற்றை உடையவரும் 31.12.62 ம் திகதிக்கு முன்னர் தம் துவக்கு முதலியனவற்றைக் காரியாதிகாரியிடமோ என்னிடமோ ஒப்படைக்கவேண்டும்.

4. இவ்வருடத்தைய அனுமதிச் சீட்டு ஒப்படைக்காவிட்டால் அனுமதிச் சீட்டுக் கட்டணத்துடன் மேலதிகமான ரூபா 1 தொலைந்து போன அனுமதிச் சீட்டின் நிதிக்காகச் செலுத்தப்பட வேண்டும்.

5. 1963 ம் ஆண்டு மார்ச் மாதம் 31 ம் திகதிக்குள் 1963 ம் ஆண்டு அனுமதிச் சீட்டுக்களைப் பெருதவர்கள் மீது வழக்குத் தொடரப்படும்.

கே. பீ. திசாநுயக்க,
அரசாங்க அதிபரும் அனுமதிச் சீட்டுக் கொடுப்பவரும்.

மாத்தளை கச்சேரி,
1962 ம் ஷூ அக்டோபர் மீ 13 ந உ.

11—3.

## பிரகடனம்

திரிகோணமலே மாவட்டத்திலுள்ள தம்பலகாமம் தெற்கு வெண்டரசன் புர குடியேற்றத்திட்ட பிரிவிலுள்ள கால்நடைகளிடையே தொண்டையடைப்பான் நோய் ஆரம்பித்திருப்பது காரணமாக, 1957 ம் ஆண்டின் 33 ம் இலக்க "தொற்றுநோய்கள் (விலங்குகள்) பிரமாணத் திருத்த சட்டத்தின்" கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்திலும் குறித்த பிரமாணத்தின் (அத்தியாயம் 327) உட்பிரிவு 4, உப உட்பிரிவு (1)ன் விதிகளுக்கு அமையவும், அரசாங்க பிரதம மிருகவைத்தியரான அபேரத்ன பண்டாரநாயக ஆகிய யான், கீழ்க் குறித்த எல்லேகளுக்குள் அடங்கிய பிராந்தியத்தை ஒரு "தொற்று நோய் பிரதேசம்" என்று பிரகடனப்படுத்துகின்றேன்.

வடக்கு : பட்டினப்பிரிவு காரியாதிகாரியின் பிரிவு ;

தெற்கு : மகாவெலி கங்கை-களுகங்கை ;

கிழக்கு : கொட்டியாரம் குடா ;

மேற்கு : கண்டி திரிகோணமலே ரோட்டில் 84 வது கட்டைக் கல்லில் இருந்து பட்டினப்பகுதி கட்டுக்குளம் பகுதிகளின் தெற்கெல்லேயைத் தொடும்வரையுள்ள கற்பனரேகை.

இப்பிரகடனம் மறு அறிவித்தலால் நீக்கப்படும்வரை இப்பகுதியிலிருந்தும் இப்பகுதிக்கும் கால்நடைகள் அல்லது மாட்டுவண்டிகள் நடமாட்டத்தை நடத்துதல் ஆகாதென்று இதே பிரமாணத்தின் 7 வது உட்பிரிவின்கீழ் பிரகடனஞ்செய்கின்றேன்.

"தொற்றுநோய்" பிராந்தியத்திலுள்ளவர்கள் சட்டப்பிரகாரம் கையாளவேண்டிய செயற்பாடுகளே எடுத்துரைக்கும் 1937 ம் ஆண்டின் தொற்றுநோய் (விலங்குகள்) பிரமாணங்களே, கால்நடை உரிமையாளரும் மாட்டுவண்டிகள் உரிமையாளரும் தம் அவதானத்துக்கு எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். இப்பிரமாணங்களின் விரிவான தகவல்களே திரிகோணமலே பகுதியில் உள்ள மிருகவைத்தியரிடமிருந்தும் தம்பலகாமம் பகுதி காரியாதிகாரியின் களரியில் இருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

ஈண்டுப்பொறிக்கப்பட்ட தேதிமுதல் இப்பிரகடனம் செயல்முறைக்கு வந்துள்ளது.

அபேரத்ன பண்டாரநாயக்க,
அரச பிரதம மிருகவைத்தியர்.

கமத்தொழில் துணையதிபர் களரி,
(விலங்குற்பத்தி-சௌக்கியம்)
கமத்தொழிற்றுறை, பேராதனே,
1962 ம் ஆடு ஒக்டோபர் மீ 25 ந் உ.
11-149.

---

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலே நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள்யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய **சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.**

அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய கிரய விகிதங்கள்

## "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கசெற்)"

வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம்,** கொழும்பு, அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் **வேண்டும்.**

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல்வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல்வேண்டும்.

6. " நகலை " கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக " ரைப் " அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப் பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறொக்ராருல் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1962 ம் ஆண்டு யூலை மாதம் 16 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | | | | ரூ. | ச. |
|---|---|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | ... | ... | ... | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | | ... | ... | 10 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | ... | ... | ... | 110 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் ... | | ... | ... | 220 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமைதோறும்** இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட் கிழமை பி. ப. 3.30 மணி)** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. **சந்தா விபரம் :**

அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு)

| | | | | உள்ளூர் | | | வெளியூர் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூ. | ச. | | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் | ... | ... | ... | 22 | 50 | ... | 35 | 50 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு | ... | ... | ... | 12 | 50 | ... | 18 | 0 |
| முதற் பகுதியின் இருபிரிவுகள் | ... | ... | ... | 20 | 0 | ... | 28 | 0 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை | | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|---|
| | சதம் | | சதம் |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 25 | ... | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 50 | ... | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 10 | ... | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 20 | ... | 15 |

**இவைகளில் எவையேனும்** பெற விரும்புவோர் சரியான பணத் தொகையை, அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி **500,** கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் **விற்பனை செய்வதற்கும்** இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.